

# வீணை தனம்மாள்

கீதா ராஜா

தஞ்சாவூரின் காவேரி நதியின் நீருக்கும் மண்ணிற்கும் ஒரு சக்தி உண்டு. ஆம். அங்கு பிறந்தவர்களுக்கு சங்கீத ஞானம் என்பது வழிவழியாக ரத்தத்தில் ஊறி வரும் என்று கூறுவதுண்டு.

1868 ஆம் ஆண்டு மே மாதம் வீணை தனம்மாள் தஞ்சாவூரில் பிறந்தாள். காமாட்சி அம்மாளின் பேத்தி சுந்தரம்மாளின் மகளான தனம்மாளின் முதல் குரு அவரது தாய். சாத்தனூர் பஞ்சநாத அய்யர், புதும் பால்தாஸ், தர்மபுரி சுப்பராயர் மற்றும் திருவொற்றியூர் தியாகையர் போன்ற பல சங்கீத கலைஞர்களிடம் கற்ற சங்கீத பாடங்கள் தனம்மாளின் சங்கீத அறிவின் பலத்தை அதிகரித்தது.

ஒரு வீணைக் கலைஞராக தனம்மாளின் புகழ் நீண்ட நெடுங்காலம் கர்நாடக சங்கீத உலகில் நிலைத்திருந்தது. இனிமை, மிக உயர்ந்த ஞானம், மன அமைதி இவை அனைத்தையும் தரவல்லதாக இவரது இசை இருந்தது.

தனம்மாளின் நான்கு மகள்கள் ராஜலக்ஷ்மி அம்மாள், லக்ஷ்மி ரத்னம்மாள், ஜெயம்மாள், காமாட்சி அம்மாள் அனைவரும் சங்கீத பாடகிகள்தான். காமாட்சி அம்மாளின் மகள்கள் தான் பிருந்தா முக்தா (வாய்ப்பாட்டு; அபிராமசுந்தரி (வயலின்) தனம்மாளின் பேத்திகள் ஆவார்கள். பிருந்தாம்மாவின் மகளான திருமதி வேகவாஹினி விஜயராகவன் சங்கீத கலைஞர் ஆவார். இவர் பிருந்தாம்மாவுடன் இணைந்து நிறைய கச்சேரிகள் பாடியிருக்கிறார்.

தனம்மாளின் மற்றொரு பேத்தி பாலாம்மா என்று அன்புடன் இன்றளவும் அழைக்கப்படும் திருமதி பால சரஸ்வதி. அவரது மகளான திருமதி லக்ஷ்மி என்று வீணை தனம்மாளின் குடும்பத்தில் உள்ள அனைத்து பெண்மணிகளும் கலைமேடையை அலங்கரித்தவர்கள் என்பது பெருமைக்குரிய விஷயமாகும். இதற்கும் மேலாக இப்படிப்பட்ட உயர்ந்த பெண்மணிகளைப்பற்றி ''லேடீஸ் ஸ்பெஷல்'' தீபாவளி மலரில் எழுதுவது மேலும் பெருமைக்குரிய விஷயமாகும்.

இதுபோல திரு. டி. சங்கரன் (தமிழ் இசை சங்கக் கல்லூரி), திரு. டி. விஸ்வநாதன் (புல்லாங்குழல்) மற்றும் திரு. டி. ரங்கநாதன் (மிருதங்கம்) போன்றோரும்

Compiled By Smt. Kanthalakshmi Chandramouli
"Ladies Special" Deepavali Malar 2012

இக்குடும்பத்தை சார்ந்தவர்கள்தான். பாடகர் திரு. எஸ். கிரீஷ் (பிருந்தாம்மாவின் பேரன்), பரதக்கலைஞர் அனிருத்தா நைட் (பாலாம்மாவின் பேரன்), திருமதி உமா மகேஸ்வரி (திருமதி முக்தாவின் பேத்தி), திரு. பாலாஜி வெங்கடேஷ்வர் (திருமதி பிருந்தாவின் சகோரரின் மகன்) என இவர்களும் இச்சங்கீத குடும்பத்தின் அடுத்த தலைமுறையும் கலை உலகை சார்ந்தவர்கள்.

எட்டாவது வயதில் பாடத்துவங்கிய எனக்கு என் பெற்றோர் திருமதி பாமா. திரு. பாலகிருஷ்ணன் அளித்த ஊக்கம் கணக்கிடலங்காதது.

1973 ஆம் ஆண்டு என்னுடைய திருமணம் முடிந்து என் கணவர் திரு. ராஜாவின் கரம் பற்றி திரு. சேதுராமன் திருமதி ராஜலக்ஷ்மி (மாமனார் மாமியார்) வீட்டில் காலடி எடுத்து வைத்தேன். அங்கு என்னை வரவேற்றது திருமதி. பிருந்தாம்மாவின் சங்கீதம்தான். ஆம்! என் மாமியார் வீட்டில் என் குரு பிருந்தாம்மாவின் சங்கீதம்தான் சதா ஒலித்துக்கொண்டே இருக்கும். சென்னையிலிருந்து பம்பாய்க்கு ஒவ்வொரு வருடமும் மே ஜூன் மாதம் மாதுங்காவில் உள்ள எங்கள் வீட்டிற்கு அவர் வந்து விடுவார்.

என் கணவரின் தங்கை அருணா சாய்ராம், பாடகர் ஹரிஹரனின் தாய் திருமதி அலுமேலு மணி, திருமதி வாணி ஜெயராமின் மாமியார் திருமதி பத்மா ஸ்வாமிநாதன் ஆகியோருடன் நானும் இணைந்து பிருந்தாம்மாவின் காலடியில் அமர்ந்து பாட்டு கற்றுக் கொண்ட காலகட்டங்கள் ஆகும்.

பிருந்தாம்மாவின் பாட்டி வீணை தனம்மாளுக்கு எப்படி பாட்டுதான் உயிர் மூச்சோ அது போன்றே ப்ருந்தாம்மா எங்களுக்கு வேதபாடசாலையில் கற்றுத்தருவது போல மிகமிக இதமாகவும் ஆன்மீக உணர்வோடும் பாட்டு கற்றுத் தருவார்.

குருவிடம் நேர்முகமாக பாட்டுக் கற்றுக்கொண்ட பாக்கியத்தை இறைவன் எனக்கு அளித்தார். அதாவது குருவின் எதிரில் அமர்ந்து சிஷ்யர்கள் வேதத்தைக் கர்ணபரம்பரையாக கற்றுக் கொள்வது போல, பிருந்தாம்மா தன் குரல், வாயசைவு ஆகியவற்றின் மூலம் கற்றுக்கொள்பவர்கள் முழுமையான கற்றுக் கொள்ளும் வரை, அலுப்பில்லாது பலமுறை பாடிக் காண்பிப்பார். அதனால் அது அப்படியே மனதில் பதிந்து விடும் அழகை நேரில் கண்டு ரசித்தவர்கள் இன்றும் அதைப்பற்றி பேசி மகிழ்வதுண்டு.

ஒரு முழுக் குடும்பமே அன்றிலிருந்து இன்று வரை பாட்டிற்காகவே தன்னை அர்ப்பணித்திருப்பது என்பது இறைவனின் கருணைதான்.

பொதுவாக இந்துஸ்தானி சங்கீத பரம்பரையில் 'கரானா' என்று ஒரு வார்த்தையை உபயோகிப்பார்கள். எழு தலைமுறைகள் தொடர்ந்து ஒரு குடும்பத்தில் பாடி அதற்காகவே அனைத்தையும் சமர்ப்பித்திருந்தால் அந்தக் குடும்பத்தின் பெயரைக் கூறி (கரானா/பாணி) என்று புகழ் பெறுவார். அதுபோன்ற ஒரு உயர்ந்த இடத்தை வீணை தனம்மாள் பாணி என்று கூறப்பட்டுள்ளார் வீணை தனம்மாள்.

எப்பொழுதாவது எங்களிடம் வீணை தனம்மாளின் வித்வத்தையும் ~~அவருடைய செல் 93806 92939~~

அந்தப் பாணியைப் பற்றியும் என் குரு பிருந்தாம்மா பேசும்பொழுது மெய்மறந்து நாங்கள் கேட்போம்.

இன்று மைக்குகளும் மிக உயர்ந்த ஆடியோ சிஸ்டங்களும்ம் அலங்காரமான மேடைகளும் இருக்கும் காலகட்டத்தை எல்லாம் மறந்து பின்னோக்கிச் சென்றால், வீணை தனம்மாளின் வீணை நாதம் நம் மனத்திற்குள் புகுந்து அந்த வாக்தேவியே வந்து அமர்ந்து விடுவது நிச்சயம்.

அந்தக் காலத்து மிக உயர்ந்த சங்கீத வித்வான்களான ஸ்ரீ திருக்கோடிகாவல் கிருஷ்ணய்யர், ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை, ஸ்ரீ டைகர் வரதாச்சாரியார், ஸ்ரீ பூச்சி சீனிவாஸ அய்யங்கார் போன்றவர்கள் வீணை தனம்மாளின் வீணை நாதத்தைக் கேட்க வருவார்கள். இது அவருடைய ஆத்மாவிற்குள் இருந்து வரும் சங்கீதமாகும். அதனால் மிகச்சிறந்த ஒரு சக்தியும், விச்ராந்தியும் இருந்தது.

"தைலதாரை" என்று கூறப்படும் தொடர்ந்து வாசிக்கும் தன்மை விலம்பகாலம் என்பதில் மிகச்சிறந்த உயர்ந்த இடத்தை பெற்றுள்ளார்.

ஊனையே உருக்கும் தீக்ஷிதர் பாடல்கள், சாஸ்திரிகள் கிருதிகள், க்ஷேத்ரய்ய பதங்கள் ஆகியவற்றில் அவருக்கு இருந்த ஞானம் மிக அதிகம்.



ஒரு முழுக் குடும்பமே அன்றிலிருந்து இன்று வரை பாட்டிற்காகவே தன்னை அர்ப்பணித்திருப்பது என்பது இறைவனின் கருணைதான்.



தியாகையரின் அபூர்வமான கிருதிகள், சுப்பராய சாஸ்திரிகள் கிருதிகள், தர்மபுரி சுப்பராயரின் ஜாவளிகள், சுப்பராம அய்யரின் பதங்கள் ஆகியவை வீணை தனம்மாளின் வீணை மூலமாக கேட்கப் பெற்றவர்கள் மிகுந்த பாக்யசாலிகள், பிருகாக்களைவிட கமகங்கள் மிக அதிகமாக அவர்களிடம் வெளிப்படும்.

தனம்மாளின் வீணையின் ஒவ்வொரு வார்த்தையும் வல்லின மெல்லினத்தோடு வெளிப்படுவது அந்த ஸரஸ்வதி தேவியின் அருள்தான். அவர் வாசிக்கும் பொழுது சிறு சத்தம் கூட வரக்கூடாது என்பதில் தெளிவாக இருந்தார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவர் வாசிக்கும் வீணைக்கச்சேரிக்கு பல சிறந்த வித்வான்கள் வந்து கேட்டு ரசித்திருக்கிறார்கள்.

அவருக்கு ஜர்தா, வெற்றிலை, வாசனை திரவியங்கள் இவை எல்லாம் மிகவும் பிடிக்கும்.

தன் மூதாதயைரிடமிருந்து தனக்குக் கிடைத்த சங்கீதம் எனும் சொத்தை தன் நான்கு மகள்கள் மூலமாக இன்றைய சந்ததிகள் வரை பரப்பி வந்திருக்கிறார். ஒரு சில சங்கதிகளை தேர்ந்தெடுத்து அதில் ஒரு மென்மையான திருப்பத்தை தன் வீணை நாதம் மூலமாக அதை வெளிப்படுத்தும் போது கேட்பவர்கள் இந்த உலகையே மறந்து விடுவார்கள்.

ஒரு ராக ஆலாபனை செய்வதற்கு முன்பே அவருடைய மனதில் எதை எப்படி செய்யவேண்டும் என்று ஒரு அட்டவணை இருப்பதைப்போல் பாரம்பரிய சங்கீதத்தை சிறிதும் வழுவாமல் மிகச்சரியாக தன் பணியை மேடையில் அவர் செய்வது அந்த கலைமகளே வாசிப்பது போல இருக்கும்.

அவர் வீணையில் கையாண்ட பலவிதமான ஸங்கதிகள் யார் அவருக்கு கற்றுத்தந்தது. எங்கிருந்து இந்த ஊற்று வருகின்றது என்பதெல்லாம் இன்று வரை புரியாத புதிர்தான்.

1938 ஆம் ஆண்டு அக்டோபர் 15 ஆம் தேதி அன்று இந்த வீணைத் தாரகை இவ்வுலகை விட்டு இறைவனடி சேர்ந்தார்.

இவர்களது குடும்பத்தில் சங்கீதமும் நாட்டியமும் தொடர்கிறது என்பது ஆச்சரியமான ஒரு விஷயமாக உள்ளது. மூன்று சங்கீதகலாநிதிகள் இக்குடும்பத்தைச் சார்ந்தவர்கள். திருமதி பிருந்தாம்மா, திருமதி பாலாம்மா மற்றும் அவருடைய சகோதரர் திரு. விஸ்வநாதன் ஆகியோர்.

பிருந்தாம்மாவிற்கு தன்னுடைய பாட்டி தனம்மாள் மீது மிகுந்த பற்றும் பாசமும் உண்டு. எங்கள் மும்பை மாதுங்கா வீட்டில் பிருந்தாம்மா வந்து விட்டாலே போதும் அந்தப் பரம்பரையின் மகத்துவ பேச்சுகள், பாட்டுக்கச்சேரி, பேச்சுக்கச்சேரி, சீட்டுக்கச்சேரி போன்றவை சூடான மற்றும் டீ மற்றும் சூடான டிபன் இவை நடுவில் நடந்து கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட ஒரு உயர்ந்த சங்கீத குடும்பத்தாருடன் எங்கள் குடும்பத்தை இணைத்ததற்கு இறைவனுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். என் குரு பிருந்தாம்மாவின் நூற்றாண்டு விழா காணும் இக்கால கட்டத்தில் இக்கட்டுரையை ஸமர்ப்பித்தது என் பாக்கியம் என்று கருதுகிறேன். ●